புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜீன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# கிளையாற்றுத் தடயங்களின் ( கிருதுமால் ,சேயாறு ) அகப்புறச் சான்றுகள்

முனைவர் சு. சிவசந்திரகுமார்
உதவிப் பேராசிரியர்
தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் - 635 601.

==========================================================================

ஆய்வுச்சுருக்கம்

முதன்மையாற்றுத் தொல்லியல் சான்றுகள் (வையை, பாலாறு) தமிழின் தொன்மைக்குச் சான்றுகளாகின்றன. கிளையாற்றுத் தொல்லியல் சான்றுகள் (கிருதுமால் , சேயாறு) அதன் தொடர்ச்சியாக அமையாமல் முரண்பட்டு வேறு சமூகச் சூழலுக்கான தகுமொழி(Standard language)

அமைப்பைக் கொண்டுள்ளன. இவ்விடயம் சிக்கலுக்குரியதொன்றாகும். முதன்மை ஆற்றுவழித்தடங்களின் நீராதத்திற்கு மூலாதாரமாகத் திகழ்பவைக் கிளையாறுகள் (Distributary) ஆகும். சமய , சடங்கியல் சார்ந்த விலக்கங்களை உருவாக்கும் இடமாக இக்கிளையாற்று வழித்தடங்கள் அமைந்துள்ளன. இவ்வழித்தடங்களில் கிடைக்கும் இலக்கியம், தொல்லியல் ஆதாரங்களை இணைத்துப் பார்க்கும் போது சங்கச் சூழலில் மதிப்புப் போராட்டத்திற்கான சான்றாதாரங்களைத் தன்னகத்தே கொண்ட தரவுகளாக இத்தரவுகள் காணப்படுகின்றன. மொழி தனது ஆதிக்கத்திற்குத் தக்க நிலவியல் பகுதிகளாகக் கிளையாற்றுப் படுகைகளையே கொண்டு அமைந்துள்ளன என்பதைச் சான்றாதாரங்களுடன் இக்கட்டுரை நிரல்படுத்துகின்றது.

குறிச் சொற்கள் (key words) : கிளையாற்றுத் தடயங்கள் (Distributary), கிருதுமால் ஆறு, சேயாறு, ஊரகத் தொல்லியல் (Rural Archaeology), தகுமொழி (Standard language)

## முன்னுரை

இலக்கியங்களை முதன்மை ஆதாரங்களாகக் கொள்ள மறுகின்றது தொல்லியல். அதற்கு இலக்கியப் பிரதிகளின் இடைச் செருகல் , பாடபேதங்கள் காரணங்களாகக் காட்டப்படுகின்றன. தொல்லியல் சான்றுகளுடன் ஒத்துச் செல்லும் இலக்கியக் காரணிகளை ஏற்றுக் கொள்ளும் தொல்லியல் முரணிகளை மறுப்பது சங்கச் சமூகச் சூழலை இனங்காண்பதில் குறுக்கீடாகின்றது. இலக்கிய சான்றுகளும் தொல்லியலும் முரணிக்கும் இடங்களில் சான்றுகளை ஊற்று நோக்கும் போது ஏதேனும் தனித்த அடையாளங்கள் தென்படலாம். அச்சூழலில் ஊரகத் தொல்லியல் (Rural Archaeology), சங்கப் புலவர்களின் வட்டார மொழிநடை போன்ற தனித்த அடையாளங்களைக் கொண்டு அணுகும் போது முரணிக்கும் இடங்களை இனம் காணலாம். இதன்மூலம் தொன்மொழி மீட்டுருவாக்கத்திற்கும் சங்கச் சமூகச் சூழலை இனம் காண்பதற்குமான இன்றியமையாதத் தரவான பண்பாட்டு அகராதியொன்றை உருவாக்கலாம். இக்கட்டுரை அதற்கான சான்றுகளை அடையாளங் காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கிருதுமால் (வையை)

“தளி பொழி சாரல் ததர் மலர் தாஅய் ஒளி திகழ் உத்தி உருகெழு நாகம்” (பரி.12 .3-4) ஒளி விளங்குகின்ற படப் பொறியினையும் கண்டார் அஞ்சுதல் பொருந்தியதுமாகிய நாகப் பாம்பினது பெயரையுடைய அச்சாரலிலுள்ள நாகமரமும் என்று கூறி நாகத்தை மரமாகக் கொண்டுள்ளனர்

*உரைகாரர்கள். பரிமேலழகர், 'ஒளி திகழா நின்ற உத்தியினையுடைய அச்சத்தைத் தருகின்ற நாகமெனப் பாம்பிற்குள்ளது அதன் பெயர்த்தாய மரத்தின் கண் ஏற்றப்பட்டது' என்கிறார் (பரிபாடல் உரையுடன், கழக வெளியீடு, ப. 210).*




*படம் 1: கிருதுமால் நதியின் தூரம்*

*ஆயின், கிருதுமால் நதியின் தோற்றத்துடன் ஒப்பிடுகையில் நாகம் என்ற சொல்லை மலையாகக் கொள்ள வேண்டும். அம்மலையே தற்போதைய நாகமலையாகும். நாகமலை மதுரைக்கு அரணாக அமைந்த எண்பெருங் குன்றுகளில் ஒன்றாகும். மதுரை மாநகரம் மலைகளால் சூழப்பட்டது. இதில் புராதனம் கற்பிக்கப்பட்ட மலைகளாக அமைந்திருப்பது யானைமலை, பசுமலை, நாகமலை ஆகிய மூன்றுமாகும். நாகமலையில் இருந்து நிறைய நீர் ஊற்றுகளும் ஓடைகளும் உருவாகின்றன. புல் ஊற்று, அவ்வகையில், காக்கா ஊற்று, நாகத் தீர்த்தம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இம்மலையிலிருந்து உற்பத்தியாகும் கிருதுமால் நதி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் மதுரை மாநகரில் நூற்றிருபது அடி அகலத்தில் பாய்ந்து கொண்டிருந்தது. தற்போது பத்து அடி அகலச் சாக்கடை நீர் வடிகாலாகச் சுருங்கிவிட்டது. மதுரையில் வைகை நதிக்கு அடுத்துப் பெரிய நதியாகக் கிருதுமால் நதி ஓடியுள்ளது. கிருதுமால் நதி மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் தொண்ணூற்று மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்குப் பாய்கிறது. (h ttp://www.dinakaran.com/News_Detail.asp) நாகமலை அடிவாரத்தில் பிறந்த கிருதுமால் நதி, அப்பகுதியில் இன்று தேடினாலும் கிடைப்பது இல்லை. அதற்கான சுவடுகளும் அழிந்துவிட்டன. துவரிமான் கண்மாயின் மறுகாலே தற்போது அதன் உற்பத்தியிடம் என அறியப்படுகிறது. கிருதுமால் நதியின் பிரதான ஆதாரம் உள்ளூர் மழைப்பொழிவு மட்டுமே. வைகை அணை கட்டப்படுவதற்கு முன் கிருதுமால் நதியிலும் தண்ணீர் வளம் நிறைந்திருந்துள்ளது. ஆனால், நகர்ப் பகுதிகளில் வலம்வரும் கிருதுமால் மட்டும் சுருங்கிவிட்டதென்பது குறிப்பிடதக்கது. கிருதுமால் நதி மதுரையிலிருந்து வெளியேறி, கமுதி வரையிலும் குண்டாறாகவே செல்கிறது. அதன் பின் மலட்டாறாக மாறி, சாயல்குடியில் மூக்கையூர் அருகே கடலில் கலக்கிறது.*



படம் 2 : கிருதுமால் நதி கடலில் கலக்கும் இடம்

*சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையாடிய மாதரி ஆய்ச்சியர் குரவை முடிந்ததும் வையைக் கரையில் உள்ள திருமாலை வழிபடச் சென்றாள் என்பதை, "நீடு நீர் வையை நெடுமால் அடியேத்தித் தூவித்துறை படியப் போயினாள்" என்கிற குறிப்பின் வழி அறியவியலுகின்றது. இக்குறிப்பில் இடம்பெறும் வையையைக் "கிருதுமால் நதி" என்பதாகக் குறிப்பிடுவார் வேதாசலம் (ஸ்ரீதர்.தி.ஸ்ரீ,(ப.ஆ), மதுரை மாவட்டத் தொல்லியல் கையேடு, ப. 92) இக்கருத்து, கிருதுமால் நதிக்கும் மதுரை மக்களுக்கும் உள்ள சடங்கியல் சார்ந்த உறவைச் சுட்டும் சான்றாகிறது. இந்நிலையில் மதுரையில் ஓடிய "கிருதுமால் நதிக்கும்" பரிபாடலுக்குமான தொடர்பு குறித்து ஆராயவேண்டியுள்ளது. இளங்கோ பாடிய கிருதுமால் நதியினைப் பரிபாடலின் வையைப் புலவர்கள் பாடாமல் விடுத்திருப்பார்களா எனும் வினாத் தோன்றும். இவ்வினாவினை ஆராய்வதன் மூலம் பரிபாடல் வையைப் பாடல்களில் இடம்பெறும் வைதீகச் சடங்கியல் சார்ந்த பாடல்களின் வெளி (Space) கிருதுமால் நதிக்குரிய வெளியாகும் என்பது நிரூபணமாகும். கிடைக்கப்பெற்ற பரிபாடலுள் வையைப் பாடல்களாக ஒன்பது பாடல்களை அடையாளங்காட்டலாம் (பாடல் எண்கள்: 6, 7, 10, 11, 12, 16, 20, 22 பரிபாடல் திரட்டு 2). இவ்வையைப் பாடல்களில், 1. மழை பற்றிய செய்திகள், 2. வையை பற்றிய வருணனை, 3. மக்களைப் பற்றிய வருணனை, 4. அகப்பொருள் பற்றிய செய்திகள், 5. சடங்குகள் சார்ந்த நிகழ்வுகள் என்றமையும் ஓர் ஒழுங்கமைவினைக் காணலாம். இத்தகைய கூறுகள் ஒரே நீர்நிலைக்கு உரியனவாவென்பது வினாவே. மழை பற்றிய பெருவெள்ளச் செய்திகளும் , சடங்கியல் சார்ந்த நிகழ்வுகளும் முழுவதும் வையைக்கு உரியனவா என்பது ஐயமே. இக்குண்டாற்றங்கரையில், அதாவது இராமநாதபுரம் கமுதி அருகே கல்லுப்பட்டி என்ற ஊரில் கீழ்ப் பழங்காலத்தைச் சேர்ந்த கற்காலக் கருவி கண்டெடுக்கப்பட்டுள்ளது. "இது Chert வகைப் பாறையால் செய்யப்பட்ட இருமுகக் கற்கருவி ஆகும் (It is a biface stone tool of the Lower Palaeolithic. U Shaped tool.). இத்தகைய கற்கருவி கி.மு.60,000 ஆண்டுகள் வரை பழமையானது. இதனை முனியசாமி (கணித ஆசிரியர்) தனது கள ஆய்வில் கண்டெடுத்தார்" (வே.இராஜகுரு, திருப்புல்லாணி தொன்மைப் பாதுகாப்பு மன்றம்., தொலைபேசி வழி உரையாடலின் போது கூறிய கருத்துக்கள் 23.10.2020. வெள்ளி, இரவு 07:30-08:00). நரசிங்கம்பட்டி, திருப்புல்லாணி தொன்மைப் பாதுகாப்பு மன்றத்தைச் சார்ந்த வே.இராஜகுரு அவர்களால் கமுதி குண்டாற்றங்கரையில் முதுமக்கள் தாழிகள்*



*படம் 3 : இருமுகக் கற்கருவி , முதுமக்கள் தாழி*

*கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.*

*செய்யாறு (பாலாறு)*

*செய்யாறு திருவண்ணாமலை மாவட்டம் வழியாகப் பாயும் ஒரு பருவ கால ஆறு ஆகும். திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை பகுதியில் உருவாகும் இந்த ஆறு, பாலாற்றில் கலக்கிறது. ஜவ்வாது மலைத்தொடரின் நாட்சாமலை அருகில் நல்லாப்பட்டுக் கல்யாண மந்தையிலிருந்து உற்பத்தியாகும் சிற்றாரும் கீழ்விளாமுச்சியிலிருந்து உற்பத்தியாகும் சிற்றாறும் ஒன்றிணையும் இடம் கூட்டாத்தூராகும். இக்கூட்டாத்தூரில் இருந்து மேற்குத் தெற்காகப் பாய்ந்து ஜவ்வாது மலை இரண்டாகப் பிரியும் கோயில்கொள்ளை எனுமிடத்தில் மலையடிவாரம் அடைந்து செய்யாறாக உருபெறுகிறது. பின் குப்பநத்தம் அணையுனூடே பாய்ந்து பின்பு செங்கம் அருகில், வடகிழக்காகத் திரும்பி, திருவண்ணாமலை மாவட்டத்தின் முழு நீளத்திற்கும் பாய்கிறது. இச்செய்யாற்றில் பாம்பாறு, கிளியாறு, கல்லாறு, பேராறு(தொன்னாறு), நாமக்கல்லாறு, கோரியாறு ஆகியன சேர்கிறது. ஜவ்வாது மலையின் எருமையூர் மற்றும் பெருங்காட்டூர் பகுதியில் இருந்து உற்பத்தியாகும் சிற்றாறு ஒன்று. கிழக்கு நோக்கி மலையினூடாகப் பாய்ந்து பட்டறைக் காடு எனுமிடத்தில் மிருகண்ட நதியாக உருபெருகிறது. மேலும் பயணித்து ஆலத்தூர் அருகில் செய்யாற்றுடன் கூடுகிறது. ஜவ்வாது மலையின் அடிவாரத்திலுள்ள செண்பகத்தோப்பு அணையிலிருந்து உருவாகும் கமண்டல நதி எனும் துணை ஆறும் அமிர்தி அருகில் வரும் நாகநதி ஆறும், ஆரணி அருகே உள்ள சம்புவயாயநல்லூர் கிராமத்தில் ஒன்று இணைந்து, கமண்டல நாக நதி என உருப்பெற்று ஆரணி நகரின் வழியாக சென்று வாழைப்பந்தல் எனுமிடத்தில் செய்யாற்றுடன் இணைகிறது. இங்கிருந்து சுமார் அரை கி.மீ. அகலத்தில் செய்யாறு வடக்குக் கிழக்காக ஓடி, காஞ்சிபுரம் நகரை அடுத்த பழையசீவரம் எனும் ஊரில் திருமுக்கூடல் அருகே பாலாற்றுடன் இணைந்து வங்காள விரிகுடா கடலில் கலக்கிறது.*

''வனைகலத் திகிரியிற் குமிழி சுழலும்
துணைசெலற் றலைவா யோவிறந்து விரிக்கும்
காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்
யாண ரொருகரைக் கொண்டனிர் கழிமின்''

*(மலைபடு. 474-477)*

*'வெண்நெல்லை அறுப்பார் கொட்டிய பறை ஓசையை வெறுத்து, அஞ்சி, சிவந்த கண்ணையுடைய எருமைக் கடா, இனத்தைப் பிரிந்து, வலிமையோடு விரைந்து ஓடும். அது நும்மேல் வராமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள். குயவன் வனைகின்ற மட்கலத்தின் உருளை சுழலுவது போல் சேயாற்றின் நீர், குமிழிகளுடன் சுழன்று விரைவாய் வாய்த்தலைதயில் 'ஓ' என்ற*

பேரிரைச்சலுடன் ஓடும் அக்காட்சி பார்ப்பவர்க்கு விருப்பத்தையும் கண்ணுக்கு இனிமையையும் தரும் அச்சேயாற்றின் புதுவருவாயுடைய கரை வழியாக நீங்கள் செல்லுங்கள். என்பதாகச் சங்கத் தொகைநூலான பத்துப் பாட்டில் குறிப்பிடப்படுகின்றது. திருவண்ணாமலை மாவட்டத்தின் முழு நீளத்திற்கும் ஓடும் செய்யாறு ஆறு மாவட்டத்தின் வேளாண் பாசனத்திற்கும், குடிநீர்த் தேவைக்கும் முக்கிய ஆதாரமாகும். செய்யாறு மற்றும் அதன் துணை ஆறுகளின் கரைகளில், திருவண்ணாமலை மாவட்டத்தின் முக்கிய நகரங்களான செங்கம், கலசப்பாக்கம், போளூர், ஆரணி, திருவத்திபுரம் மற்றும் வந்தவாசி ஆகிய நகரங்கள் அமைந்துள்ளன. திருவத்திபுரம் நகரின் ஊடே பாய்வதால், இந்த ஆறு செய்யாறு என பெயர் பெற்றதா? அல்லது இந்த ஆறு பாய்வதால் இந்த நகரம் இப்பெயர் பெற்றதா? என்பது கேள்வியே. திருவத்திபுரம் நகரில் இந்த ஆற்றின் கரையில் திருஞானசம்பந்தர் நாயன்மாரால் பாடல் பெற்ற, ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த செய்யாறு வேதபுரீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. சேயாறு (சேய்+ஆறு) என்பது, காலப்போக்கில் திரிந்தும், 'செய்யாறு' எனப் பெயர் பெற்றதாகவும் தகவல்கள் உள்ளன.



படம் 4 : கூட்டாற்றின் வழித்தடம்

திருவண்ணாமலை மாவட்டத்தின் முழு நீளத்திற்கும் ஓடும் செய்யாறு மாவட்டத்தின் வேளாண் பாசனத்திற்கும், குடிநீர்த் தேவைக்கும் முக்கிய ஆதாரமாகும். செய்யாறு மற்றும் அதன் துணை ஆறுகளின் கரைகளில், திருவண்ணாமலை மாவட்டத்தின் முக்கிய நகரங்களான செங்கம், கலசப்பாக்கம், போளூர், ஆரணி, திருவத்திபுரம் மற்றும் வந்தவாசி ஆகிய நகரங்கள் அமைந்துள்ளன.

கிளையாற்று இலக்கியங்களும் புலவர்களும்

கிளையாற்று வழித்தடங்கள் என்றறியப்படும் இடங்களில் தோன்றிய சிற்றூர்கள், இலக்கியங்கள் ,நாட்டார் குறிப்புகள் சொல்லாட்சிகள் போன்றன இருக்கை ஆய்வு சார்ந்து தொகுத்தளிக்கப்படவுள்ளன. இக்கிளையாற்று வழித்தடங்களில் கிடைத்துள்ள இலக்கியப் புலவர்களின் வட்டாரமொழிநடை சொல்லாட்சிகள் திரண்ட சான்றாதாரங்களாகும்.

| வ.எண் | வையைப் புலவர்கள் | வையை | திருமால் | செவ்வேள் |
|---|---|---|---|---|
| 1) | நல்லந்துவனார் | 06,11,20 | - | 08 |
| 2) | மையோடக்கோவனார் | 07 | - | - |
| 3) | கரும்பிள்ளைப்பூதனார் | 10 | - | - |
| 4) | நல்வழுதியார் | 12 | 13 | - |
| 5) | நல்லழுசியார் | 16 | - | 17 |

*பரிபாடலில் வையை பாடிய புலவர்களை இரு பிரிவினராகப் பகுக்கலாம். ஒரு பிரிவினர் நாட்டு மரபிற்கு உரியவர்கள். மற்றொரு பிரிவினர் வேத மரபுக்கு உரியவர்கள். வையைப் பாடல்களை மட்டும் பாடி, ஏனைய திருமால், செவ்வேளைப் பாடாத மையோடக்கோவனார், கரும்பிள்ளைப் பூதனார் இருவரும் நாட்டு மரபிற்கு உரியவர்கள். ஏனைய நல்லந்துவனார், நல்வழுதியார், நல்லழுசியார் போன்றவர்கள் வேத மரபிற்கு உரியவர்கள். குறிப்பாக, அவர்களுடைய பாடல்களில் அந்தணர்களைப் பற்றிய நேரடியான குறிப்புகள் உண்டு. "புலம்புரி யந்தணர் கலங்கினர் மருண்டு" (வையை 06:45) "விரிநூ லந்தணர் விழவு தொடங்கப் புரிநூ லந்தணர் பொலங்கல் மேற்ப" (வையை 11:78-79)வையை 12, 16ஆம் பாடல்களில் அந்தணர்கள் பற்றிய குறிப்புக்கள் இல்லாது போயினும் திருமாலையும் செவ்வேளையும் பாடித் தங்களை அந்தணப் புலவர்கள் என்பதாக மெய்ப்பித்துக் கொண்டனர். ஆயின் நாட்டு மரபிற்கு உரியவர்களாகக் கருதப்படும் மையோடக்கோவனார், கரும்பிள்ளைப் பூதனார் பாடல்களில் அந்தணர்கள் பற்றிய குறிப்புகள் இல்லை; வைதீகச் சடங்குகள் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் மரபார்ந்த மந்திரச்சடங்கு முறைகளைப் பாடியுள்ளனர். எனவே, பரிபாடல் வையைப் புலவர்களை நாட்டுமரபுப் புலவர்கள் எனவும் வேதமரபுப் புலவர்கள் என்பதாகவும் பிரிக்கலாம். நாட்டு மரபுப் புலவர்களுடைய பாடல்களில் இடம்பெறும் சடங்குமுறைகள் நாட்டார் வழக்காற்றியலுக்கு மிக நெருக்கமாக உள்ளன. வேத மரபிற்குரிய புலவர்களுடைய பாடல்களில் வைதீகச் சடங்குமுறைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்விடத்தில் நாட்டுமரபு, வேதமரபு என்பதையும் கடந்து, "வையை X கிருதுமால்" எனும் நதிகளின் வேறுபாட்டையும் கணக்கில் கொள்ளலாம். இவ்விடத்தில் மலைபடுகடாம் பாடிய பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன் அந்தணப்புலவர் என்பது நினைவுக்கூரத்தக்கது.*

*மொழியியல் பண்பாட்டியல் நோக்கில் கிளையாற்றுத் தடயங்கள்*

*முதன்மையாற்று வழித்தடங்களில் கிடைத்த தரவுகளுடன் கிளையாற்றுத் தடயங்கள் ஒப்பீட்டாய்விற்கு உட்படுத்தப்படவுள்ளன. அதற்கான தரவுகள் பண்பாட்டு அடிப்படையில் சரிப்பார்க்கபடவுள்ளன. உள்ளுணர்வும் வட்டார வேறுபாடும் உடைய சொற்கள் நிரல்படுத்தப்பட்டுள்ளன. சான்றாக,*

*சான்றோன்[1]* — *பெ . தொண்டை மண்டலத்தில் வீரன் என்ற பொருளைக் குறிக்கும்.*

*சான்றோன்[2]* — *பெ . பாண்டிய நாட்டைச் சார்ந்த இலக்கியங்களில் அறிவுடையோரைக் குறிக்கும். என்ற பொருண்மையிலான நெறிமுறையில் தரவுகள் தொகுக்கப் படவுள்ளன.*

*கிளையாற்றுப் பண்பாட்டு அகராதி உருவாக்கம்*

*கிளையாற்று வழித்தடங்களில் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளை அதே பகுதிகளில் காணப்படும் இலக்கியத்தரவுகளுடன் ஒன்றிணைத்த பண்பாட்டு அகராதியின் இறுதி வடிவம் இடம்பெறும். தமிழிக் கல்வெட்டுகளில் உள்ள சொற்கள் வழக்குச் சார்ந்த சொற்கள் இலக்கியங்களில் இடம்பெறும் வட்டாரச் சொற்கள் ஆகிய பண்பாட்டுக் கூறுகளுடன் தொகுக்கப்படவுள்ளன. அதன் மூலமாக அவ்விலக்கியங்கள் முன்னிருத்தும் பண்பாட்டு விழுமியங்களும் மதிப்புப் போராட்டமும் கணக்கில் கொள்ளப் பெறும். எனவே, பாண்டிய நாட்டு எழுத்துடைய நடுகற்களாக (புலிமான் கோம்பை, தாதாப்பட்டி) அதே வேளையில் வழிபாட்டுக்குரியதாக இல்லாமல் இருக்கின்றது. தொண்டை மண்டல நடுகற்கள் வழிபாட்டிற்குரியது மட்டுமல்ல. கல்லே யல்லது நெல் உகுத்து பரவும் கடவுளும் இலமே' என அறுதியிட்டுக் கூறும் புறம் 335 உரியவர் தொண்டை மண்டலத்திற்குரியவராகவே உறுதியிட்டு உரைக்க இயலும். ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன் இராசபாளையத்திலிருந்து 2:30 மணிநேரத் தூரத்திலுள்ள ஆதிச்சநல்லூர் ஈமக்காடறிந்த நெல் கதிருடன் கூடிய தாய்த் தெய்வ வழிபாட்டை உணராமலாப் பாடியிருப்பார். அப்படி தலைவன் மாங்குடி மருதனே மறுத்தால் அத்தெய்வ வழிபாடு யாருக்குரியது என்ற வினா இயல்பாகவே தோன்றும். ஆகவே பெயரும் பீடும் எழுதி அதர்தோறும் நடும் நடுகற்களும் நெல் உகுத்துப் பரவாது மக்கள் வழிப்பாட்டிற்குரிய நடுகற்களும் வெவ்வேறு வட்டாரம், பண்பாடு சார்ந்தவை என்பது பெறப்படும். சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடன் எனக் கூறி ஒளிறுவாள் அருஞ்சமம்*

முருக்கிக் களிறு எறிந்து பெயர்தலைக் காளைக்குக் கூறும் பொன்முடியாருடன் எண்ணத்தக்கவரே மாங்குடி கிழார். ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக் கல்லைப் பரவ பரிந்துரைக்கும் மாங்குடிகிழார் தொண்டைமண்டல புலவராகத் தான் இருந்திருப்பார். அவர் குறிப்பிடும் நடுகறக்கள் தான் வணக்கத்திற்குரியன. மதுரை மருதளின நாகனாரால் பாடப்படும் நடுகறக்கள் வணக்கத்திற்குரியனவல்ல. சங்க இலக்கிய மொழியமைப்பினைப் "பாட்டு மரபு X எழுத்து மரபு" என்ற ஊடாட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னிறுத்த வேண்டுமென்பர். அதன் தொடர்ச்சியாகக் "கிளைமொழி X தகுமொழி" என்ற அடிப்படையை எடுத்துக் கொள்ளலாம்.

முடிவுரை

நாகரிக வாழ்விற்கான தோற்றாதாரமாக முதன்மையாற்றுத் தடயங்கள் கொள்ளப்பட்டாலும் கிளையாற்றுத் தடயங்கள் சடங்கியல் முறையில் முக்கியத்துவம் அடைந்துள்ளது. இக்கரைவாழ்வானது சடங்கியலுடன் தொடர்பில் அமைந்திருப்பதும் நாட்டு மரபு, வேத மரபு குறித்த படிநிலைகளில் பிரிக்கும் படியாக இல்லை. மொழி அடையாளங்களின் பரவலாக்கம் வெளிச் சார்ந்து நிலம் சார்ந்து இருந்திருக்கவில்லை. மாறாக நீராதாரம் சார்ந்து குறிப்பாகக் கிளையாற்றுத் தடயங்கள் சார்ந்து வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆய்விற்கு உதவியன


1) கல்யாண சுந்தரையர் (பதி.) ., பரிபாடல் மூலமும் பரிமேலழகருரையும்., கபீர் அச்சகம். மூன்றாம் பதிப்பு, 1948.
2) பக்தவத்சல பாரதி (பதி.) பண்பாட்டியல் நோக்கில் பண்டைத் தமிழர் சமய மரபுகள்., புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம். புதுச்சேரி. 2011.
3) பசுமை நடை குழு., மதுர வரலாறு. நீரின்றி அமையாது உலகு.. பசுமை நடை வெளியீடு., மதுரை. 2015.
4) ராஜ்கௌதமன்., கலித்தொகை - பரிபாடல் ஒரு விளிம்பு நிலை நோக்கு., விடியல் பதிப்பகம். கோவை. 2011.
5) ஸ்ரீதர். தி.ஸ்ரீ,(ப.ஆ), மதுரை மாவட்டத் தொல்லியல் கையேடு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2005.


********* ********* ********** ********* ********* ********** ********** **********